Lastly, the objection of certain honourable Members // was that the municipalities should be given a share in this tax. The main purpose of this Bill is to cover the Budget deficit. So, it is not possible to /// share it with anybody. It has to be taken entirely for State purposes for the time being till our financial position improves.

So, I request that the Motion be passed." (5)

### *Section II — Matter for Elaboration — Time for Dictation* : 4 minutes

**INSTRUCTIONS TO THE SUPERINTENDENT**

1. The "Notes" are to be dictated at the rate of ***120 words*** a minute and are marked into portions of one minute's duration which again are sub-divided into quarters. The reader will read with a watch in hand and see that he is adhering to the time.

2. The candidates must be told that they are to take down in shorthand the notes of imaginary letters, etc., that will be dictated to them, and that they are to be elaborated into longhand in proper documentary form for signature wherever required. As soon as the candidates are ready, the following must be dictated. The number of each question should also be dictated.

3. Before commencing the dictation, the candidates should be informed that ***five marks*** are reserved for their shorthand performance.

4. The candidates should be informed that their handwriting during elaboration should be legible and that sufficient space should be left between lines.

---

1. Sealed Tenders are invited by the Registrar, Anna University of Technology, Coimbatore, for the supply of Answer Booklets. Tender documents may be obtained from his office on payment of / Rs. 1,000 by means of Demand Draft payable at Coimbatore in favour of the Registrar from 5th to 20th August 2011 on all working days // during office hours. Completed tenders will be received up to 3 p.m. on 21st August and will be opened at 4 p.m. on the same day in /// the presence of the tenderers or their authorized representatives. The Registrar reserves the right to accept or reject any tender without giving any reason. Draft Tender Notice.

***(Marks : 20)***

2. Tamil Nadu (1) Forest Plantation Corporation Limited, Tiruchirappalli, requires Chief Accounts Officer. The candidate should be a Graduate preferably in Commerce. He should be a Chartered Accountant. Degree in Law will be a / desirable additional qualification. He should have experience of 10 years in reputed Companies. Scale of pay is Rs. 15,000 to 40,000 with Grade Pay of Rs. // 6,000. The candidate should be below 45 years of age. He should appear for interview at his own cost. Applications giving a resume of qualifications and experience together /// with a recent passport size photograph should reach Managing Director of the Corporation on or before 10th December 2011. Draft advertisement.

***(Marks : 15)***

3. The Tenth Annual General Meeting (2) of the Lasco Steels Limited will be held at the Registered Office of the Company at Race Course, Coimbatore, on Monday, the 26th September 2011 at / 12 noon to transact the following business, namely, adoption of Profit and Loss Account for the year ended 30th June 2011 and the Balance Sheet as // on that date; Election of Directors in place of retiring Directors; and appointment of Auditor. A Member may appoint a proxy to attend and vote instead of himself. Draft Notice /// of meeting to be issued by the Director in charge.

***(Marks : 10)***

4. A Five-year old girl died after she was hit by the school bus door soon after she got (3) down from the bus near a house in Alandur. She was a kindergarten student of a School in Adambakkam. She took the school bus home as usual after classes. She / got down from the bus and her father was waiting on the opposite side to take her to their house. Even before the front door of the bus was closed, // the driver started the bus. The door hit the girl. She fell down and was critically injured. Her father was witness to the accident. The girl was given first aid /// and soon rushed to a Hospital where she died. The Traffic Police have registered a case and have arrested the bus driver. Prepare an eye-witness account of the accident. (4)

***(Marks : 10)***

# 444

## பிப்ரவரி 2012

படிக்க நேரம் — ஏழு நிமிடங்கள்

*விரிவெழுத்தில் எழுத நேரம்* — ஒரு மணி 15 நிமிடங்கள்

( பெரும மதிப்பெண்கள்: 100 )

**கண்காணிப்பாளரின் கவனத்திற்கு**

1. பின்வரும் உரைப் பகுதியைத் தெளிவான, உரத்த குரலில், ஒரு தடவை மட்டுமே, எந்த ஒரு சொல்லையோ அல்லது சொற்றொடரையோ திரும்பப் படிக்காமலும், நிறுத்தக் குறிகள் எதையும் குறிப்பிடாமலும், தேர்வு எழுதுவோர்க்குப் படிக்க வேண்டும்.

2. இவ்வுரைப் பகுதி நிமிடத்திற்கு 70 சொற்கள் (மூன்று எழுத்துக்கள் கொண்டது ஒரு சொல் என்று கணக்கிடும் முறையில்) வீதம், நிமிடப் பகுதிகளாகவும், ஒவ்வொரு நிமிடப் பகுதியும் மீண்டும் கால் நிமிடப் பகுதிகளாகவும் குறிக்கப்பட்டுள்ளது. படிப்பவர், வினாடிமுள் கொண்ட கைக்கடிகாரத்தை வைத்துக் கொண்டு, படிக்கும்பொழுதே ஒவ்வொரு கால் நிமிடத்திலும் மொழியின் வேகம் சரியாக உள்ளதா என்பதைக் கவனிக்க வேண்டும்.

3. படிக்கப்பட்டதைச் சுருக்கெழுத்தில் எழுதிக் கொள்ள வேண்டுமென்றும், சுருக்கெழுத்தில் எழுதிக் கொண்டதை, அதற்கு நேரான விரிவெழுத்தில் எழுத வேண்டுமென்றும் தேர்வு எழுதுவோர்க்குத் தெரிவிக்க வேண்டும்.

4. படிக்க ஆரம்பிக்கும் முன்னரே, படிப்பவர் வினாடி முள் கொண்ட கைக்கடிகாரத்தின் உதவியுடன் உரைப்பகுதி முழுவதையும் படித்துப் பார்த்து, குறிப்பிட்ட வேகத்தில் படிப்பதற்குத் தம்மைச் சரிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

5. விடை எழுத அனுமதிக்கப்பட்ட நேரம் முடிந்தவுடன், தேர்வு எழுதுவோர் தாங்கள் எழுதிய சுருக்கெழுத்துக் குறிப்பேட்டையும், விடைத்தாளையும் ஒன்றாக இணைத்துக் கண்காணிப்பாளரிடம் கொடுக்க வேண்டும்.

6. சுருக்கெழுத்துத் திறனுக்காக பத்து மதிப்பெண்கள் ஒதுக்கப்பட்டுள்ளன என்று மொழிவுக்கு முன்னரே தேர்வு எழுதுவோர்க்குத் தெரிவிக்க வேண்டும்.

7. "விரிவெழுத்தில் எழுதும்போது, கையெழுத்து தெளிவாக இருப்பதுடன், வரிகளுக்கிடையே உரிய இடைவெளி இருக்க வேண்டும்" என்று தேர்வு எழுதுவோர்க்கு அறிவிக்கப்படவேண்டும்.

---

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்/தின் மீது பேச வாய்ப்பு அளித்தமைக்கு முதற்கண் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். விவசாயிகளின் வாழ்வாதார//ம் வளர்ச்சியடைய, தொழிலாளர்கள் தொய்வின்றி வாழ்ந்திட, அரசு ஊழியர், ஆசிரியர் குறைகளைக் களைந்திட, மாற்றுத் /// திறனாளிகள் மனங்குளிர வாழ்ந்திட என்று தொடர்ச்சியாக தினமும் சிந்தித்து நல்ல பல திட்டங்களை வகுத்து, அ(1)வற்றை நடைமுறைப்படுத்த அயராது பாடுபட்டுவரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு என் நெஞ்சா/ர்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொழில் துறையை மேம்படுத்த, உள்ளாட்சி அமைப்புகளை // ஊக்குவிக்க, மகளிர் சுய உதவிக் குழுக்களை ஒருங்கிணைக்க நமது தமிழக அரசு எடுத்து வரும் சீரிய நடவடி ///க்கைகளை நாம் அனைவரும் அறிவோம். சமீப காலமாக நிலவிவரும் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த தமிழக அரசு எ(2)ந்த

நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்று எதிர்க்கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் இந்த அவையில் கருத்/து தெரிவித்திருக்கிறார்கள். அவர்களது கருத்து சரியானதல்ல என்பதற்கு ஒருசில உதாரணங்களை இங்கே நான் சுட்//டிக்காட்ட விரும்புகிறேன்.

விலைவாசி உயர்வால் ஏழையெளிய மக்கள் பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்ற உயரிய நோ///க்கத்தில், இலவச அரிசி வழங்கும் திட்டத்தையும், பாமாயில், பருப்பு மற்றும் மளிகைப் பொருட்களை மலிவு விலையிலும், (3) பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கி வருவது விலைவாசியைக் குறைக்க எடுத்த நடவடிக்கையில் ஒன்று என்பதை மா/ண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

தமிழகத்தில் இந்த ஆட்சி பொறுப்பேற்றது மு//தல் வறட்சி என்பதே இல்லை என்ற அளவிற்கு, ஆண்டுதோறும் தேவையான மழை பெய்து கொண்டிருப்பதை நாம் அனைவரும் அறி///வோம். இந்தச் சூழ்நிலையில் விவசாயத்திற்குத் தேவையான தண்ணீர், மின்சாரம், விவசாய இடுபொருட்கள் போன்றவற்றை உ(4) ரிய காலத்தில் அரசு அளித்து வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சியுடன் வாழ்கிறார்கள் என்பதைப் பெருமையோடு குறி/ப்பிட விரும்புகிறேன்.

நமது அரசு அறிவித்துள்ள "மாவட்டந்தோறும் மருத்துவக் கல்லூரிகள்" என்ற திட்டம் ஒரு முத்//தான திட்டம் என்பதைப் பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன். இதன் காரணமாக, தமிழகத்தில் அதிக அளவில் அர///சு மருத்துவக் கல்லூரிகள் உருவாக்கப்பட்டு, மருத்துவ வசதியில் இந்தியாவிலேயே தமிழகம் முதலிடம் வகிக்கும். (5)

சென்னை, அண்ணா சாலையிலுள்ள அன்பு சகோதரர்கள், மதுரை, பாரதியார் சாலையிலுள்ள இராமன் சகோதரர்களுக்கு அனுப்/பிய கடிதம்.

அன்புடையீர்,

தாங்கள் அண்மையில் தயாரித்து எங்களுக்கு அனுப்பியுள்ள மோட்டார் பம்ப் வகைகள் சென்னை // மாநகர மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறோம். /// தங்களது இந்த வகை மோட்டார் பம்புகள், தண்ணீர் பற்றாக்குறையாக உள்ள சென்னை போன்ற மாநகரங்களில் வசிக்கும் (6) மக்கள், தங்களது குடியிருப்புகளிலுள்ள ஆழ்துளைக் கிணறுகளிலிருந்து தண்ணீரை மிகவும் சுலபமாக மேல்நிலைத் / தொட்டிகளில் ஏற்றுவதற்கு உதவிகரமாக இருக்கின்றன. இதன் காரணமாக, பெரும்பாலான வாடிக்கையாளர்கள் தங்//களது தயாரிப்பினைக் கேட்டு வாங்குகின்றனர். எனவே, அவர்களின் விருப்பத்தினை உணர்ந்து, தங்களது உற்பத்தி///யினை அதிகரிக்கும் அதேநேரத்தில், தரத்தில் குறையில்லாமல் பார்த்துக்கொள்ளக் கேட்டுக்கொள்கிறோம்.

தங்கள் நம்பிக்கையுள்ள, (7)

---

**பிப்ரவரி 2012**

படிக்க நேரம் — ஏழு நிமிடங்கள்

*விரிவெழுத்தில் எழுத நேரம்* — **ஒரு மணி முப்பது நிமிடங்கள்**

( பெரும மதிப்பெண்கள்: 100 )

**கண்காணிப்பாளரின் கவனத்திற்கு**

1. பின்வரும் உரைப் பகுதியைத் தெளிவான, உரத்தக் குரலில், ஒரு தடவை மட்டுமே, எந்த ஒரு சொல்லையோ அல்லது சொற்றொடரையோ திரும்பப் படிக்காமலும், நிறுத்தக் குறிகள் எதையும் குறிப்பிடாமலும், தேர்வு எழுதுவோர்க்குப் படிக்க வேண்டும்.

2. இவ்வுரைப் பகுதி நிமிடத்திற்கு 90 சொற்கள் (மூன்று எழுத்துக்கள் கொண்டது ஒரு சொல் என்று கணக்கிடும் முறையில்) வீதம், நிமிடப் பகுதிகளாகவும், ஒவ்வொரு நிமிடப் பகுதியும் மீண்டும் கால் நிமிடப் பகுதிகளாகவும் குறிக்கப்பட்டுள்ளது. படிப்பவர், வினாடிமுள் கொண்ட கைக்கடிகாரத்தை வைத்துக் கொண்டு, படிக்கும்பொழுதே ஒவ்வொரு கால் நிமிடத்திலும் மொழிவின் வேகம் சரியாக உள்ளதா என்பதைக் கவனிக்க வேண்டும்.

3. படிக்கப்பட்டதைச் சுருக்கெழுத்தில் எழுதிக் கொள்ள வேண்டுமென்றும், சுருக்கெழுத்தில் எழுதிக் கொண்டதை, அதற்கு நேரான விரிவெழுத்தில் எழுத வேண்டுமென்றும் தேர்வு எழுதுவோர்க்குத் தெரிவிக்க வேண்டும்.

4. படிக்க ஆரம்பிக்கும் முன்னரே, படிப்பவர் வினாடி முள் கொண்ட கைக்கடிகாரத்தின் உதவியுடன் உரைப்பகுதி முழுவதையும் படித்துப் பார்த்து, குறிப்பிட்ட வேகத்தில் படிப்பதற்குத் தம்மைச் சரிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

5. விடை எழுத அனுமதிக்கப்பட்ட நேரம் முடிந்தவுடன், தேர்வு எழுதுவோர் தாங்கள் எழுதிய சுருக்கெழுத்துக் குறிப்பேட்டையும், விடைத்தாளையும் ஒன்றாக இணைத்துக் கண்காணிப்பாளரிடம் கொடுக்க வேண்டும்.

6. சுருக்கெழுத்துத் திறனுக்காக பத்து மதிப்பெண்கள் ஒதுக்கப்பட்டுள்ளன என்று மொழிவுக்கு முன்னரே தேர்வு எழுதுவோர்க்குத் தெரிவிக்க வேண்டும்.

7. "விரிவெழுத்தில் எழுதும்போது, கையெழுத்து தெளிவாக இருப்பதுடன், வரிகளுக்கிடையே உரிய இடைவெளி இருக்க வேண்டும்" என்று தேர்வு எழுதுவோர்க்கு அறிவிக்கப்படவேண்டும்.

---

தலைவர் அவர்களே,

மின்வாரிய நிதிநிலை அறிக்கையின் மீது என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகின்றேன்.

மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் இ/த்துறையிலேயே அலுவலராகப் பணியாற்றி, இத்துறைக்கான அமைச்சர் பொறுப்பையும் ஏற்று, செயல்பட்டுக் கொண்டு வருகிறார். அவருடைய பதவிக் காலத்தில் // தமிழகத்தில் மின்வெட்டு என்ற அவல நிலையே இருக்கக்கூடாது என்று பொதுமக்கள் மிக அதிகமாக எதிர்பார்க்கிறார்கள். இயற்கை சூழ்நிலை காரண///மாக நமக்கு ஏற்படுகிற மின்வெட்டு என்ற அவல நிலையைத் தவிர்க்க, நாம் மாற்று ஏற்பாடுகளைப் பரிசீலனை செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோ(1)ம் என்பதை மறந்துவிட முடியாது. நமது மாநிலம் பருவ மழையையே நம்பியிருக்கும் மாநிலம். பருவ மழையால் அடிக்கடி ஏமாற்றப்பட்டு வருகிற மாநி/லம் நமது மாநிலம். எனவே இயற்கையின் நுட்பமான இந்த நிலையை அடிப்படையாக வைத்து, மின்வெட்டு இனி இல்லாத வகையில் மாற்று ஏற்பாடுகளை நாம் பரிசீ//லனை செய்து, மின் தட்டுப்பாட்டை நிரந்தரமாகவே போக்கத் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.



[ *திருப்புக*

இதற்கான மாற்று ஏற்பாடுகளைக் குறித்து பல்///வேறு கருத்துக்கள் சொல்லப்பட்டு வருகின்றன. ஏற்கெனவே நாம் அனல் மின்சக்தி மூலம் மின் பற்றாக்குறையைச் சரிப்படுத்திக் கொண்டிருக்கிறோம். அதே (2) சமயத்தில் அணுசக்தியை எந்த அளவுக்குப் பயன்படுத்தி நாம் மின்சக்தியை உற்பத்தி செய்ய முடியும் என்பதையும் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம் / என்பதும் உண்மை. அதுபோல், சூரிய வெப்பத்தையும் மற்றும் கடல் அலையையும் பயன்படுத்தி அதிலிருந்து ஆக்க சக்தியை உருவாக்கி, அவற்றின் மூலமாக//வும் எவ்வாறு இந்த நாட்டு மக்களுக்கு நாம் பயன் கிட்டச் செய்ய முடியும் என்பதையும் உடனடியாக ஆராய்ந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எ///ன்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்து, கிராமங்களில் உள்ள தெரு விளக்குகள் இப்போதும் சரியாக எரிவது இல்லை. இப்ப(3)டிப்பட்ட புகார் ஏற்கெனவே இருந்துதான் ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பிலிருந்து தெரு விளக்குகளைப் பராமரிக்கும் பொறுப்பை மின்வாரியமே ஏற்/றுக் கொண்டது. ஆனால் இப்போதும் இக்குறைபாடு பல இடங்களிலும் இருந்து கொண்டுதான் இருக்கிறது. மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களில் இக்குறை//பாடு பரவலாகச் சொல்லப்படுவது தற்போது வழக்கமாகி விட்டது. இந்த நிலைக்கு மின் வாரியம் ஆளாகக்கூடாது என்பதுதான் என்னுடைய கருத்தாகும்.///

அடுத்து, குடிசைகளுக்கு ஒரு விளக்குத் திட்டம் என்பது இந்த அரசின் சிறந்த ஒரு திட்டமாகும். இத்திட்டத்தின் மூலமாக ஏழை எளிய மக்களுக்கு (4) மின் வசதியை உருவாக்கித்தரும் நிலை ஏற்பட்டிருக்கிறது. பொதுவாக எல்லோராலும் பாராட்டப்படுகிற திட்டமாக இது இருந்தாலும், இந்தத் திட்டத்/தில் இருக்கின்ற ஒரு குறைபாட்டையும் நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தத் திட்டத்தின்கீழ் இணைப்புக் கோரி போடப்படும் மனு//க்களை வாங்குவதில் பொது மக்களுக்குப் பெரிதும் இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றன. இதற்கான விண்ணப்ப மனுக்கள் பல்வேறு விலைகளில் தனியார்க///ளால் விற்கப்படுகின்றன. மின்சார வாரியமே இந்த மனுக்களை அச்சடித்து, குறைந்த விலையில் மின்சாரத் துறையின் மூலமாகவே விற்பனை செய்வது நல்லது. (5)

சென்னை, கேசவன் கூட்டமைப்பிலிருந்து காஞ்சிபுரம், வருண் கூட்டமைப்பிற்கு எழுதும் கடிதம்.

அன்புடையீர்,

தங்கள் கடிதம் கிடைக்கப் பெற்று தகவ/ல் அறிந்தோம்.

நாங்கள் அனுப்பிய நிலத்தடி நீர் இறைக்கும் மோட்டார் பம்ப்செட்டுகளில் நான்கு சரியாக இயங்கவில்லை என்று தெரிவித்திருக்கிறீர்க//ள். நாங்கள் அவை எல்லாவற்றையும், அனுப்பும் முன்பே, இயந்திர வல்லுநர்களைக் கொண்டு பரிசோதனை செய்து, சரி பார்த்துத்தான் அனுப்பினோம். இதுதான் எ///ங்கள் வழக்கம். எனினும், கோளாறுகள் இருப்பதாகச் சொல்லியிருப்பதால், எங்கள் இயந்திர வல்லுநரை உடனே அனுப்பி ஆய்வு செய்யச் சொல்கிறோம். கோளா(6)றுகள் இருந்தால், அவற்றைப் பழுதுபார்த்து, அவர் ஆவன செய்வார். இருப்பினும் அவை திருப்திகரமாக இயங்காவிட்டால், அவற்றை நாங்கள் திருப்பி எ/டுத்துக் கொண்டு, அவற்றுக்குப் பதிலாக, வேறு புதிய பம்ப்செட்களை வழங்க நாங்கள் தயாராக உள்ளோம். எங்களிடம் இப்போது 'சுகுணா' பம்ப்செட்கள் விற்ப//னைக்கு உள்ளன. தேவைப்படும்போது, நீங்கள் விரும்பினால் அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஏற்கெனவே நாங்கள் அனுப்பிய சரக்குகளுக்கான கிரயத்து///க்கு தாங்கள் விரைவில் ஒரு காசோலை அனுப்புவீர்கள் என்று எதிர்பார்க்கிறோம். எங்கள் மேன்மையான சேவை தொடர்ந்து நீடிக்கும்.

தங்கள் நம்பிக்கையுள்ள, (7)

# 569

பிப்ரவரி 2012

## சுருக்கமும் விரிவாக்கமும்

மொழிவிற்கான நேரம்.

[பிரிவு (1) — சுருக்கத்திற்குரிய பகுதி — ஐந்து நிமிடங்கள்.

பிரிவு (2) — விரிவாக்கத்திற்குரிய பகுதி — நான்கு நிமிடங்கள்.]

[முக்கியக் குறிப்பு.— சுருக்கத்திற்கான பகுதியை மொழிந்து இரண்டு நிமிட இடைவெளிக்குப் பிறகு, விரிவாக்கத்திற்கான பகுதியை மொழிய வேண்டும். இவ்விரண்டு நிமிட இடைவெளியின்போதும் தேர்வு எழுதுவோர் மொழிவு அறைக்கு வெளியே செல்லாமல் தம் இருக்கையிலேயே அமர்ந்திருக்க வேண்டும். இரண்டு மொழிவுகளையும் ஒரே சுருக்கெழுத்துக் குறிப்பேட்டில்தான் எழுத வேண்டும்.]

சுருக்கம் மற்றும் விரிவாக்கம் செய்ய மொத்த நேரம் — 2 மணியும் 15 நிமிடங்களும்.

(பெரும மதிப்பெண்கள் : 100)

பிரிவு (1) — சுருக்கம் : 40

பிரிவு (2) — விரிவாக்கம் : 60

### பிரிவு (1) — சுருக்கத்திற்குரிய பகுதி

**கண்காணிப்பாளரின் கவனத்திற்கு**

1. பின்வரும் உரைப் பகுதியைத் தெளிவான, உரத்த குரலில், ஒரு தடவை மட்டுமே, எந்த ஒரு சொல்லையோ அல்லது சொற்றொடரையோ திரும்பப் படிக்காமலும், நிறுத்தக் குறிகள் எதனையும் குறிப்பிடாமலும், தேர்வு எழுதுவோர்க்குப் படிக்க வேண்டும்.

2. இவ்வுரைப் பகுதி நிமிடத்திற்கு 90 சொற்கள் (மூன்று எழுத்துக்கள் கொண்டது ஒரு சொல் என்று கணக்கிடும் முறையில்) வீதம், நிமிடப் பகுதிகளாகவும், ஒவ்வொரு நிமிடப் பகுதியும் மீண்டும் கால் நிமிடப் பகுதிகளாகவும் குறிக்கப்பட்டுள்ளது. படிப்பவர், வினாடிமுள் கொண்ட கைக்கடிகாரத்தை வைத்துக்கொண்டு, படிக்கும்பொழுதே ஒவ்வொரு கால் நிமிடத்திலும் மொழிவின் வேகம் சரியாக உள்ளதா என்பதைக் கவனிக்க வேண்டும்.

3. படிக்கப்படும் உரைப் பகுதியை சுருக்கெழுத்தில் எழுதிக்கொள்ள வேண்டுமென்றும், அதை 150 சொற்களுக்கு மிகாமல், அயற்கூற்றில், கடந்த கால வினைச் சொல்லாக்கத்தில், தகுந்த தலைப்புடனும், உட்தலைப்புடனும், பொழிப்பு அறிக்கையாகச் சுருக்கி அளிக்க வேண்டுமென்றும், சுருக்கி அளிக்கப்பட்ட விடையில் உள்ள வார்த்தைகளை எண்ணி, விடையின் கடைசியில் குறிக்க வேண்டுமென்றும் தேர்வு எழுதுவோர்க்கு மொழிவுக்கு முன்னரே தெரிவிக்க வேண்டும்.

4. படிக்க ஆரம்பிக்கும் முன்னரே, படிப்பவர், வினாடி முள் கொண்டுள்ள கைக்கடிகாரத்தின் உதவியுடன் உரைப் பகுதி முழுவதையும் படித்துப் பார்த்து, குறிப்பிட்ட வேகத்தில் படிப்பதற்குத் தம்மைச் சரிப்படுத்திக் கொள்ளவேண்டும்.

5. விடை எழுத அனுமதிக்கப்பட்ட நேரம் முடிந்தவுடன், தேர்வு எழுதுவோர் தாங்கள் எழுதிய சுருக்கெழுத்துக் குறிப்பேட்டையும், விடைத் தாளையும் ஒன்றாக இணைத்துக் கண்காணிப்பாளரிடம் கொடுக்க வேண்டும்.

6. சுருக்கெழுத்துத் திறனுக்காக ஐந்து மதிப்பெண்கள் ஒதுக்கப்பட்டுள்ளனவென்று, மொழிவுக்கு முன்னரே தேர்வு எழுதுவோர்க்குத் தெரிவிக்கவேண்டும்.

7. "விரிவெழுத்தில் எழுதும்போது, கையெழுத்து தெளிவாக இருப்பதுடன், வரிகளுக்கிடையே உரிய இடைவெளி இருக்க வேண்டும்" என்று தேர்வு எழுதுவோர்க்கு அறிவிக்கப்படவேண்டும்.

அரசு வியாபாரத் திட்டங்களின்மீது முதலீடு குறித்த மானியத்தின்மீது சட்டப் பேரவையில் ஓர் உறுப்பினர் பேசியதாவது :—

"தலைவர் அவர்களே, இந்/த மானியத்தின்மீது பேசும்போது, நான் ஒருசில யோசனைகளைக் கூற விரும்புகிறேன்.

அரசு கடந்த பல ஆண்டுகளாக பூச்சி மருந்துகள் தெளிப்பதற்கும், உ//ரங்கள் போடுவதற்கும், நோயைத் தடுப்பதற்கும் விவசாயிகளுக்குப் பலவிதமான யோசனைகளையும், மருந்துகளையும் அளித்திருக்கிறது. இருந்தாலும் /// காலாகாலத்தில் பூச்சி மருந்துகளைத் தெளிக்கவோ, நோய்களைப் போக்கவோ, உரம் போடுவதற்கு பருவ காலத்தில் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்யவோ வேண்(1)டிய திறமை இன்னும் விவசாயிகளிடத்தில் உருவாகவில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். காலத்திற்கு ஏற்ப பழைய முறைகளை மாற்றிக்கொண்டு, பு/திய முறைகளைக் கையாளும் திறமை விவசாயிகளிடம் பூரணமாக உருவாகி விட்டது என்று சொல்ல முடியாது. தலைமுறை தலைமுறையாக விவசாயத்தில் ஈடுபட்டு வ//ந்தவர்கள் லாபம் தராத எந்த முறைகளைக் கையாண்டு வந்தார்களோ அதே முறைகளைத்தான் இன்னும் பின்பற்றி வருகிறார்கள். ஆகவே திருந்திய விவசாய /// முறைகளில் ஊக்கம் அளிப்பதற்கும், பயிற்சி அளிப்பதற்கும் விவசாயக் குடும்பத்திலுள்ளவர்களுக்கு விவசாய செய்நேர்த்தி முறைகளில் பயிற்சி (2) அளிப்பதற்கும், பயிற்சிப் பள்ளிகள் ஆரம்பித்திருப்பதை நான் வரவேற்கிறேன். அதே சமயத்தில், அவசியமானால், இன்னும் வேண்டிய அளவு அதிகமா/ன பயிற்சிப் பள்ளிகளை அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, தரமான வித்துக்களைப் பெருக்குவதற்காக, ஊராட்சி ஒ//ன்றியங்களும் ஊராட்சிகளும் மூல வித்துக்களை குறிப்பிட்ட கிராம சகாயக்குகளுக்கு வழங்குகிறார்கள். இது சரியாக நடைபெறுகிறதா என்பதைப் /// பார்ப்பதற்காக, அவர்கள் இந்த மூல வித்துக்களைப் பெற்றுச் செல்கிறார்களா என்பதை வேளாண்மை அதிகாரிகள் கவனிக்க வேண்டும் என்று உத்தரவிட(3)ப் பட்டிருக்கிறது. இந்த ஏற்பாட்டை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். அப்படி கிராம சகாயக் யாராவது மூல வித்துக்களைப் பெற்று கொள்ளாமல் / இருந்தால், விவசாயத் துறை அதிகாரி, உள்ளூர் ஊராட்சியைக் கலந்துகொண்டு, தரமான விதைகளைப் பெருக்குவதற்கு, மாற்று ஏற்பாடுகள் செய்ய வேண்டும் எ//ன்று உத்தரவிடப்பட்டுள்ளது வரவேற்கத் தக்கது. புதிய வகையில் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருப்பவர்கள் செய்யாது போனாலும் கூட, மற்ற///வர்கள் இதைச் செய்ய முன்வர வேண்டும் என்பதற்காக இந்த வாய்ப்பை அளித்திருப்பது வரவேற்கத் தக்கது.

அடுத்து, உரக் குழிகள் தயாரிப்பு சம்(4)பந்தமாக, சில இடங்களில் சில குறைகள் இருக்கின்றன. ஆனால், அவற்றை சட்டமன்றத்திலே வந்து சிலர் சொல்கிறார்கள். நமக்குச் சிரத்தை இரு/க்குமானால், நம்முடைய ஊராட்சியிலே, ஊராட்சி ஒன்றியப் பகுதியிலே எந்தெந்த இடங்களில் உரக் குழிகள் சரியாகத் தயாரிக்கப்படவில்லை என்பது // நமக்குத் தெரியாமல் இருக்க முடியாது. தவறாக மான்யத்தை வாங்குவதற்கு அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகள் முயன்றால், நாம் கவனம் செலுத்த வே///ண்டும். அந்த இடத்திலுள்ள அதிகாரிகளின் கவனத்திற்கு அதைக் கொண்டுவந்து, அந்தக் குறையை நிவர்த்திப்பதற்கு உறுப்பினர்கள் முயல வேண்டும்." (5)

## பிரிவு (2) — விரிவாக்கத்திற்குரிய பகுதி
### கண்காணிப்பாளரின் கவனத்திற்கு.

1. பின்வரும் உரைப் பகுதியைத் தெளிவான, உரத்த குரலில், ஒரு தடவை மட்டுமே, எந்த ஒரு சொல்லையோ அல்லது சொற்றொடரையோ திரும்பப் படிக்காமலும், நிறுத்தக் குறிகள் எதனையும் குறிப்பிடாமலும், தேர்வு எழுதுவோர்க்குப் படிக்க வேண்டும்.

2. இவ்வுரைப் பகுதி நிமிடத்திற்கு 90 சொற்கள் (மூன்று எழுத்துக்கள் கொண்டது ஒரு சொல் என்று கணக்கிடும் முறையில்) வீதம், நிமிடப் பகுதிகளாகவும், ஒவ்வொரு நிமிடப் பகுதியும் மீண்டும் கால் நிமிடப் பகுதிகளாகவும் குறிக்கப்பட்டுள்ளது. படிப்பவர், வினாடிமுள் கொண்ட கைக்கடிகாரத்தை வைத்துக்கொண்டு, படிக்கும்பொழுதே ஒவ்வொரு கால் நிமிடத்திலும் மொழியின் வேகம் சரியாக உள்ளதா என்பதைக் கவனிக்க வேண்டும்.

3. படிக்கப்படும் கற்பனைக் கடிதங்கள் முதலியவற்றின் குறிப்புகளைச் சுருக்கெழுத்தில் எழுதிக்கொள்ள வேண்டுமென்றும், அக்குறிப்புகளைக்கொண்டு ஒவ்வொரு வினாவிற்கும் ஏற்ற வகையில், தேவைப்படும் இடங்களில் கையொப்பமிடுவதற்கேற்ப, உரிய படிவத்தில் விரிவாக்க வேண்டும் என்றும் தேர்வு எழுதுவோர்க்கு மொழிவுக்கு முன்னரே தெரிவிக்க வேண்டும்.

4. ஒவ்வொரு வினாவின் எண்ணையும் படிக்க வேண்டும். ஆனால், ஒவ்வொரு வினாவிற்கும் ஒதுக்கப்பட்டுள்ள மதிப்பெண்கள் மொழிவிற்குப் பின்னர்தான் தேர்வு எழுதுவோர்க்குத் தெரிவிக்கப்பட வேண்டும்.

5. படிக்க ஆரம்பிக்கும் முன்னரே, படிப்பவர், வினாடிமுள் கொண்ட கைக்கடிகாரத்தின் உதவியுடன் உரைப்பகுதி முழுவதையும் படித்துப் பார்த்து, குறிப்பிட்ட வேகத்தில் படிப்பதற்குத் தம்மைச் சரிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

6. விடை எழுத அனுமதிக்கப்பட்ட நேரம் முடிந்தவுடன், தேர்வு எழுதுவோர் தாங்கள் எழுதிய சுருக்கெழுத்துக் குறிப்பேட்டையும், விடைத்தாள்களையும் ஒன்றாக இணைத்துக் கண்காணிப்பாளரிடம் கொடுக்க வேண்டும்.

7. சுருக்கெழுத்துத் திறனுக்காக ஐந்து மதிப்பெண்கள் ஒதுக்கப்பட்டுள்ளனவென்று, மொழிவுக்கு முன்னரே தேர்வு எழுதுவோர்க்குத் தெரிவிக்க வேண்டும்.

8. "விரிவெழுத்தில் எழுதும்போது, கையெழுத்து தெளிவாக இருப்பதுடன், வரிகளுக்கிடையே உரிய இடைவெளி இருக்க வேண்டும்" என்று தேர்வு எழுதுவோர்க்கு அறிவிக்கப்படவேண்டும்.

---

1. சென்னை, கீழ்ப்பாக்கம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநரால் ஆறாயிரம் மெட்ரிக் டன் துவரம் பருப்பு கொள்முதல் செ/ய்ய மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை ஆயிரம் ரூபாய் செலுத்தி டிசம்பர் // இருபது நண்பகல் பன்னிரண்டு மணி வரை பெற்றுக் கொள்ளலாம். பிணை வைப்புத் தொகை முப்பதாயிரம் ரூபாய். ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கப்பட வேண்///டிய கடைசி நாள் டிசம்பர் இருபத்திமூன்று பிற்பகல் இரண்டு மணி வரை. அவை அன்றே மூன்று மணிக்கு திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (1) தயார் செய்க.

(மதிப்பெண்கள் : 15)

2. தஞ்சாவூர், தமிழ் பல்கலைக் கழகத்திற்கு ஆங்கில உதவிப் பேராசிரியர் தேவை. கல்வித் தகுதி முதுகலைப் பட்டம். மாதத் / தொகுப்பூதியம் இருபத்து ஓராயிரம் ரூபாய். விண்ணப்பங்கள் பல்கலைக்கழகப் பதிவாளருக்கு பதினைந்து நாட்களுக்குள் அனுப்பப்பட வேண்டும். இ//து குறித்து பதிவாளர் வெளியிடும் விளம்பரம் தயார் செய்க.

(மதிப்பெண்கள் : 10)

3. எண்ணூர் தனியார் நிறுவன ஊழியர் ஒருவர் நேற்று முன்தினம் வேலை முடிந்து தன் ச///க ஊழியர் ஒருவருடன் ராயப்பேட்டையில் உள்ள வீட்டிற்கு பைக்கில் புறப்பட்டார். எண்ணூர் விரைவு சாலையில் வந்தபோது, ஒரு டிரெய்லர் லாரி பைக் மீது மோ(2)தியதில் அவர் படுகாயம் அடைந்து, மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியிலேயே இறந்தார். அவருடைய சக ஊழியர் ஒரு தனியார் மருத்துவமனை/யில் சிகிச்சை . பெற்று வருகிறார். வண்ணாரப்பேட்டை போக்குவரத்துக் காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்து லாரி ஒட்டுநரைத் தேடி வருகின்றனர். விப//த்தை நேரில் பார்த்ததாக அறிக்கை தயார் செய்க.

(மதிப்பெண்கள் : 15)

4. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகப் பணியாளர் கூட்டுறவு சங்கத்தின் பேரவைக் கூட்டம் /// இரண்டாயிரத்து பத்தாம் வருடம், டிசம்பர் இருபத்திநான்காம் நாள், வெள்ளிக்கிழமை காலை பத்து மணிக்கு சென்னை, மெக்ளின் தெருவில் அமைந்துள்ள மத்தி(3)ய கூட்டுறவு வங்கியின் கட்டட அரங்கில் நடைபெறும். அப்போது கீழ்க்கண்ட பொருட்கள் தீர்மானத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். இரண்டாயிரத்/து ஒன்பது–பத்தாம் ஆண்டு தணிக்கையை பேரவைக்கு சமர்ப்பித்தல்; வருகிற ஆண்டிற்கான உத்தேச வரவு–செலவுத் திட்டத்தை அங்கீகரித்தல்; தனி அலு//வலர் அனுமதியுடன் கொண்டுவரப்படும். இதர பொருட்கள் உறுப்பினர்கள் அனைவரும் பேரவைக் கூட்டத்தில் கலந்து கொண்டு நிகழ்ச்சியைச் சிறப்///பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இது பற்றி தனி அலுவலர் அவர்களால் வெளியிடப்படும் கூட்ட அறிவிப்பு தயார் செய்யவும். (4)

(மதிப்பெண்கள் : 15)